2023 ஜனவரி 12]

மருத்துவமனைக்கு புதிய புறநோயாளிகள் பிரிவுக் கட்டடமும், அதேபோன்று, உப்பிலியபுரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புறநோயாளிகள் பிரிவுக் கட்டடமும் கட்டித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையூர் தொகுதியில் ஏற்கெனவே இந்த மருத்துவமனைக்கு மட்டுமே ரூ.17 கோடி அறிவித்திருந்தோம். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், துறையூர் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூ.75 இலட்சத்தையும், பி. மேட்டூர் கிழக்கு துணை சுகாதார நிலையத்திற்கு ரூ.30 இலட்சத்தையும், சிறுநாவலூர் துணை சுகாதார நிலையம் கட்ட ரூ.30 இலட்சத்தையும், உப்பிலியபுரம் வட்டார பொது சுகாதார அலகு கட்டடத்திற்கு ரூ.50 இலட்சத்தையும் ஒதுக்கீடு செய்து, அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

17—

பேருந்து வசதி

*11704—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலையிலிருந்து துவரங்குறிச்சி வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) விராலிமலை–துவரங்குறிச்சி வழித்தடத்தின் மொத்த நீளம் 32.0 கி.மீ. ஆகும். இந்த 32.0 கி.மீ. வழித்தடம் முழுவதும் திருச்சியிலிருந்து மதுரை செல்கின்ற முக்கிய வழித்தடத்தில் அமைந்திருப்பதால், இந்த வழித்தடத்தில் ஒவ்வொரு 5 முதல் 10 நிமிட இடைவெளியில் புறநகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இதுதவிர, இவ்வழித்தடத்தில் 3 நகரப் பேருந்துகள் தினசரி 6 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, கோரிக்கை எழுப்பப்படுகின்ற இந்த வழித்தடத்தில் தற்போது போதுமான பேருந்து வசதி உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 மாவட்டங்களை இணைக்கக்கூடிய வழித்தடம் அது. அதாவது, விராலிமலை–துவரங்குறிச்சி வழித்தடம், திருச்சி மற்றும் புதுக்கோட்டையை இணைக்கக்கூடிய வழித்தடம். அந்த வழித்தடத்தில் மட்டும் மொத்தம் 17 கிராமங்கள் இருக்கின்றன. சுற்றிலும் 50–க்கும் மேற்பட்ட கிராமங்களும், விராலிமலை முருகன் கோயில், துவரங்குறிச்சி சந்தை என ஏழையெளிய மக்கள் பயன்படுத்தக்கூடிய வழித்தடமாக அது இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, தேசிய நெடுஞ்சாலையில், மதுரையிலிருந்து திருச்சி வரை செல்லக்கூடிய வழித்தடத்தில் அது இருந்தாலும்கூட, உள்புறம் இருக்கக்கூடிய கிராமங்களில் எங்கேயும் விரைவுப் பேருந்துகள் நிற்பதில்லை. இன்னும் சொல்லப்போனால், ஏற்கெனவே விராலிமலை பகுதியின் உள்ளே வந்து கொண்டிருந்த பேருந்துகள் தற்போது உள்ளே வருவதில்லை. பேருந்து நிலையத்திற்கு உள்ளே வராத நிலை எல்லாம் இருக்கின்றது. ஆகையினால், நகரப் பேருந்துகள்தான் வியாபார நோக்கம் இல்லாமல் ஏழையெளிய மக்களுக்குச் சேவை செய்யக்கூடியவை. அந்த மக்களுடைய தேவையைக் கருதி, கூடுதலாக,* exclusive *ஆக ஒரு* town bus*–ஐ அளித்து, முழு* single*–ம், 6, 7 நடைகள் முழுமையாக* dedicated town bus*–ஐ துவரங்குறிச்சி–விராலிமலைக்கு இயக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தி, அமர்கிறேன்.*

2023 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள் ஏழையெளிய மக்களுக்குப் பயன்படுகிற வகையில் நகரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்று சொன்னார். இன்னொரு தகவலையும் கூடுதலாகச் சொல்லியிருக்கலாம். மாண்புமிகு திராவிட மாடல் முதல்வர் அவர்களுடைய ஆட்சியில், அந்த நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்வதால் (மேசையைத் தட்டும் ஒலி) அதை அவசியம் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கலாம். இருந்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இன்றைய தேதி வரை 222 கோடியே 51 இலட்சம் பெண்கள் அந்த இலவசப் பேருந்துகளை பயணத்திற்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு நாளும் கிட்டத்தட்ட 40 இலட்சம் பெண்கள் அந்தப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். எனவே, பெண்களுக்கு மிகவும் பயன் தருகின்ற ஒரு பேருந்தாக இந்த அரசு நகரப் பேருந்துகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, கனிவோடு பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருவது என்னவென்றால், கொரோனா காலத்தில் பொதுமக்கள் யாரும் வெளியே வரவில்லை. அரசுப் பேருந்துகளை நாம் முழுமையாகப் பயன்படுத்தவில்லை. பல புதிய வழித்தடங்களில் ஏற்கெனவே செயல்பட்டுக் கொண்டிருந்த இடத்தில் பேருந்துகள் கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்டன. ஆனால், அப்படி நிறுத்தப்பட்ட பேருந்துகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டுமல்ல, என்னுடைய தொகுதி உட்பட பல இடங்களில், இப்போது மக்கள் சகஜ நிலைக்குத் திரும்பிய பின்னும், அந்த வழித்தடங்களில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் இன்றுவரை இயக்கப்படவில்லை. அம்மாவினுடைய ஆட்சியில் விதிமுறைக்கு ஏற்ப கொரோனா காலத்தில் பேருந்துகள் நிறுத்தப்பட்டன.*

மீண்டும் சகஜ நிலை திரும்பிய பின்பும் பேருந்துகள் இல்லாததால் இப்போது அந்த மக்கள் அவதியுறுகிறார்கள். ஆகையினால், உடனடியாக அரசு இதில் கவனம் செலுத்தி, கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட அனைத்து வழித்தடங்களிலும் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. இருந்தாலும், உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியமான கட்டத்தில் நான் இருக்கிறேன். கடந்த 5 ஆண்டு ஆட்சிக்காலத்தில் புதிதாக ஓட்டுநரோ, நடத்துநரோ ஒருவர்கூட பணியமர்த்தப்படவில்லை. அப்படி பணியமர்த்தப்படாத காரணத்தினால், பணி ஓய்வு பெறுகின்ற சூழல் ஏற்படுகின்றபோது, தேவையான ஓட்டுநர்கள், நடத்துநர்கள் இல்லாமல் கடந்த ஆட்சிக் காலத்தில் இருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பல பேருந்துகளை நிறுத்திவிட்டு சென்றுவிட்டார் என்பதுதான் உண்மையான செய்தி. கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகளைப் படிப்படியாக இயக்குவது சம்பந்தமாக நாங்கள் மேலாண்மை இயக்குநர்களுக்கு அறிவுரை வழங்கியதன் அடிப்படையில் அவை இயக்கப்படுகின்றன. எனவே, இதையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயபாஸ்கர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டு, அப்படி கொரோனா காலத்தில் நிறுத்தப்பட்ட பேருந்துகள் இன்னும் ஏதாவது இயக்கப்படாமல் இருந்தால் நிச்சயமாக அவற்றை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

குடமுழுக்கு

***7544—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—